07.04.2026

O.S.No. 15/2023

PW1– சுப்பிரமணிய கரையாளர்– த/பெ. கந்தசாமி கரையாளர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 5,7 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் என் வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. எனக்கு படிக்கத் தெரியும். எனது பிராதில் எனது தந்தைக்கும் சடைச்சியம்மாளுக்கும் யார் முன்னிலையில் , எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சீர்திருத்தம் செய்த பிராதிலும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. நான் செங்கோட்டை அரசு மருத்துவமனையில் 05.08.1951ம் தேதியில் பிறந்தேன். எனது பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட பிறப்பு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் கேட்டேன் எனக்கு கிடைக்கவில்லை.

4. எனது தந்தைக்கு ஏற்கனவே ராஜம்மாள் என்ற நபருடன் திருமணமானது என்றால் சரிதான். இந்துதிருமணச்சட்டம் 1955 பிரிவு 5ன் கீழ் ஒரு கணவர் தனது மனைவி உயிருடன் இருக்கும்போதோ அல்லது விவாகரத்து பெறாமல் மற்றொரு பெண்ணை திருமணம் செய்தால் அது சட்டப்படி குற்றம் என்றால் சரிதான்.

5. எனது பிராதில் எனது தந்தையின் முதல்மனைவி ராஜம்மாள், எனது தாயாரை திருமணம் செய்ய அனுமதி கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 1968 முதல் செங்கோட்டையில் இருந்தேன். இந்த விவரத்தை நான் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

6. எனது தாயார் சொந்த ஊர் முள்ளிக்குளம். எனது தாயார் யாதவர் சமுதாயத்தை சேர்ந்தவர். எனது தாயார் யாதவர் சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதை நிரூபிக்க ஆதரவு உள்ளதா என்றால் குடும்பம் உள்ளது. எனது தந்தை 1962 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

7. எனது தாயாருக்கும், எனது தந்தைக்கும் 1948 ம் திருமணம் நடைபெற்றது. எனவே எனது தாயரை திருமணம் செய்து எனது தந்தை 14 ஆண்டுகள் தான் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தையின் முதல்மனைவி ராஜம்மாளின் சொந்த ஊர் அம்பாசத்திரம்.

8. என்னை பள்ளியில் யார் சேர்த்தார் என்றால் எனது தந்தைதான். பள்ளி சான்றிதழ்களை நீதிமன்றம் கேட்கும்பட்சத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

9. எனது தாயும், தந்தையும் ஒன்றாக இருந்ததற்கு புகைப்படங்கள் இருக்கிறதா என்றால் இருந்தது, ஆனால் தற்போது இல்லை. எனது பிராதில் நான் கோரியுள்ள பரிகாரம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ளேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது கட்சிப்படி நானும் வாரிசு அதைபோல், 3 முதல் 7 பிரதிவாதிகளும் வாரிசு என்றால் சரிதான்.

10. நான் 3 முதல் 7 பிரதிவாதிகளை பொறுத்து எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் எனக்கு தெரியாது.

11. எனது தாயும், தந்தையும் திருமணம் செய்ததற்கு பத்திரிக்கை உள்ளதா என்றால் அந்த காலத்தில் பத்திரிக்கை எதுவும் கிடையாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனது பிறந்த தேதி 07.06.1950 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பள்ளியில் சேர்ப்பதற்காக அவ்வாறு உள்ளது.

12. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ளது எனது தந்தையின் கையொப்பம் கிடையாது என்றால் சரியல்ல. வீரபுத்திர கரையாளருக்கு மொத்தம் 5 வாரிசுகள். ராமசாமி கரையாளர், கந்தசாமி கரையாளர் ஆகியோர்கள் ஆண் வாரிசுகள். மீதமுள்ள 3 பேரும் பெண்வாரிசுகள்.

13. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது தாயாரின் இறந்த வருடம் 1979 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது. எனதுதாயும், தநதையும் செங்கோட்டையில் குடும்பாக குடியிருந்தனர் என்பதை காட்டுவதற்கு குடும்ப அட்டையோட, வாக்காளர் அடையாள அட்டையோ கிடையாது என்றால் சரிதான். எனது கட்சிப்படி எனது தாயார் 15 ஆண்டுகளாக செங்கோட்டையில் குடியிருந்தார் என்றால் சரிதான்.

14. எனதுதந்தை இறந்தபின்பும் செங்கோட்டையில் தான் இருந்தோம் என்றால் சரிதான். எனது தந்தையின் ஈமச்சடங்களை யார் செய்தார் என்றால் நானும், ஸ்ரீரங்கத்தம்மாளின் கணவரும் செய்தார். மேற்படி சங்கதிகளை எனது பிராதிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

15. இந்த வழக்கில் என்னை தவிர வேறு எந்த சாட்சிகளும் என் பக்கத்தில் இல்லை என்றால் சரிதான்.

16. இந்த ஊரில் இருந்து நாங்கள் விரட்டியடிக்கப்பட்டதை நிரூபிக்கும் விதமாக என் சமுதாயத்திற்கோ, வேறு யாருக்கும் தெரியுமா என்றால் என்னால் இப்போது யாரையும் கொண்டுவரமுடியாது.

17. எனது சகோதரியின் திருமணம் 1979ம் ஆண்டு கோவில்பட்டியில் நடைபெற்றது. பத்திரிக்கை அடிக்கப்பட்டதா என்றால் இல்லை. வசதி இல்லை என்பதால் பத்திரிக்கை அடிக்கவில்லை.

18. கந்தசாமி கரையாளர் சொத்துக்கள் அனைத்தும் தற்போது வில்லங்கம் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். சொத்துக்கள் வில்லங்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக நான் ஏதேனும் ஆட்சேபனை செய்தேனா என்றால் 1961–62 காலத்தில் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

19. எனது தந்தை இறந்து இவ்வளவு காலம் ஆன பின்பும் எங்கள் தரப்பில் ஏன் வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை என்றால் என் வசம் முன்பிருந்தது, தற்போது காணாமல் போய்விட்டது. காணாமல் போய்விட்டது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. கடைசி காலத்தில் எனக்கு அடையாளம் வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

20. நான் திருப்பூரில் சுமார் 25 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தேன். திருப்பூரில் குடியிருந்த காலத்தில் எனக்கும், எனது தாயாருக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

21. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் என் தாயாருக்கு இறப்பு சான்று வாங்கவில்லை என்றால் சரிதான், என் குடும்ப சூழ்நிலை காரணமாக வாங்கவில்லை.

22. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பது சம்பந்தமாகவும் நான் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

23. பிறப்பு சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்யவில்லை என்றால் நான் பிறப்பு சான்றிதழ் வேண்டி மனு கொடுத்தேன், எனக்கு கிடைக்கவில்லை. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கந்தசாமி கரையாளரின் வாரிசு என்பதற்காகவும் மற்றும் சொத்துக்களில் உரிமை கோருவதற்காகவும் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு உரிமை கோரும் வகையில் கந்தசாமி கரையாளருக்கு தற்போது எந்த சொத்தும் கிடையாது என்றால் வீடு உள்ளது.

24. வீடு சம்பந்தமாக பாகப்பிரிவினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வீட்டில் உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கு பிற உரிமையாளருக்கு எந்த வித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

25. கந்தசாமி கரையாளருக்கும் எனது தாயாருக்கும் திருமணம் நடைபெற்றதற்கு ஆவணம் ரீதியாக எந்த ஆவணமும் கிடையாது என்றால் எனது தந்தைக்கு ஆண் வாரிசு இல்லாததால் எனது தாயாரை திருமணம் செய்தார். நான் இலவசசட்ட உதவிக்குழுவில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

26. பிரதிவாதி சொல்வதுபோல் எனதுதாய்க்கும் எனது தந்தைக்கும் திருமணம் ஆகவில்லை என்றாலும், நான் கந்தசாமி கரையாளரின் வாரிசு இல்லை என்றாலும், இந்த வழக்கில் 3 முதல்7 பிரதிவாதிகளை பொறுத்து எந்த பரிகாரமும் கோராததால்அவர்கள் இந்த வழக்கிற்கு அநாவசிய கட்சியினர் என்றாலும் சரியல்ல.

27. 30.07.2005 ல் ஆவுடையம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் இறப்பு சான்றிதழின் ஒளிநகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

28. 16.05.2002 தேதியில் தங்கம் சீனிவாசன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் இறப்பு சான்றிதழின் ஒளிநகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

29. அதைபோல் ஸ்ரீரங்கத்தம்மாள் இறந்ததற்கான இணையவழி பதிவிறக்க நகல் தான என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

30. நான் சட்டஉதவி மையத்தில் கொடுத்த மனுவில் இந்த வழக்கு 5ம் பிரதிவாதி கொடுத்த மறுப்புரை மனு தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

31. உண்மையான சங்கதிகளை மறைத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

32. எனதுதாய், தந்தை செங்கோட்டையில் வைத்து இல்வாழ்க்கை நடத்தி வந்ததை நிரூபிக்க எந்த ஆதரவும் கிடையாது என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**